தேர்தல் மாவட்டங்களை வலயங்களாகப் பிரிப்பதனை இரத்துச் செய்வதற்காக உறுப்புரை 96 அ வை நீக்குதல்.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் தெரிவு செய்ய உரித்துக் கொண்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையினை தேர்தல்கள் ஆணையாளர் சான்றுப்படுத்தல் தொடர்பாக உறுப்புரை 98ற்கான திருத்தம்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையிலுள்ள வெட்டுப் புள்ளியினை எட்டில் ஒன்றில் இருந்து இருபதில் ஒன்றாகக் குறைப்பதற்கும் தேர்தல் மாவட்டங்களை வலயங்களாகப் பிரிப்பதனை இரத்துச் செய்வதற்கும் உறுப்புரை 99ற்கான திருத்தம்.

இனத்துவ அல்லது வேறுவகையிலான எந்தவொரு இனத்திலிருந்தும், பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதன் தேசிய சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஒத்ததாக உள்ளதா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக உறுப்புரை 99 அ வி ற்கான திருத்தம்.